**மிஹிந்தலை பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 09 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மிஹிந்தலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வடமத்திய மாகாண திறைசேரியால் முன்வைக்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 763,329 ஆன நீதிமன்றத் தண்டப்பணம், கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 775,340 தொகையான 03 சொத்து விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் நூலகம் மற்றம் கேட்போர் கூட கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காகஉள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து 2012 ஆம் ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 3,958,710 ஆன கடன் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 02 கட்டிடங்கிளன் பெறுமதி ரூபா 24,342,542 ஆக இருந்த போதிலும், அப்பெறுமதி 03 கட்டிடங்களாக ரூபா 40,878,012 தொகையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கான வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 16,535,470 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) சபைக்குச் சொந்தமான 78 கடைகளுடனான 06 காணிகள் முன்பள்ளி கட்டிடங்கள் அமைந்துள்ள காணி மற்றும் பொது விளையாட்டரங்கு காணி மற்றும் ஆதனங்களின் தற்போதைய பெறுமதி மதிப்பிடப்பட்டு ளுக்காக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

---

### 2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 240,000 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,349,918 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

---

#### 2.2.1 வீத வரி

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134 இன் பிரகாரம் சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பகுதிகளைக் குறிப்பிட்டு அப்பிரதேசத்தில் அமைந்துள்ள அசையாத சொத்துக்கள் அல்லது நிலையான சொத்து வகையொன்றின் ஆண்டுப் பெறுமதியை இனங்கண்டு வீத வரி அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 வாடகை

---

(அ) சபைக்குச் சொந்தமான வியாபார நிலையங்களை வருடாந்தம் குத்தகைக்கு வழங்குதன் பேரில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலுவையாக குத்தகை தொகை ரூபா 633,000 ஆக இருந்தது. அத்தொகையில் ரூபா 565,001 தொகை 10 ஆண்டுகளுக்கு மேல் காணப்படும் காணப்படும் இனங்காத மீதியொன்றாக இருந்ததுடன் அனைத்து வரிகளையும அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு பெற்றுக்கொண்டிருந்த 31 குத்தகையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட வேண்டிய கடை வாடகை மீதி ரூபா 344,430 ஆக இருந்தது.

#### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம்

---

மீளாய்வாண்டு இறுதி வரை நீதிமன்றத் தண்டப் பண பதிவேட்டின் பிரகாரம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,289,977 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 654,345 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.2 முத்திரைக் கட்டணம்

---

2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய சபைக்கு அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு உரிய பதிவேடுகளில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் முத்திரைக் கட்டணங்களுக்காக பராமரிக்கப்பட்ட பதிவேட்டிலும் பதிவுகளை உள்ளடக்குதல் மிகவும் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 121.5 ஏக்கரான 46 மயானங்களின் உரித்தை முறையாக சபைக்கு கையேற்கப்பதற்கும் நிதிக்கூற்றுக்களில் உரிய தகவல்களை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த 75 செயற்திட்டங்களுக்காக ரூபா 10,169,928 தொகை சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அதற்குச் சமனான தொகை சபையினால் கடன்கொடுத்தோர்களக்காக செலுத்த வேண்டியிருந்தது. இம்மீதிகள் உருவான முறை காண்பிக்கப்பட்ட விரிவான அட்டவணை எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) ரூபா 143,230 கூட்டுத்தொகையான கொடுப்பனவு 17 உறுதிச்சீட்டுக்களுக்காக சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை குடியரசின் தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் 01 ஆண்டு மதல் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 14 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 174,563 ஆன மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்குச் சொந்தமான ரூபா 1,880,000 பெறுமதியான ரிபே டிராக்டர் மற்றும் 02 நீர் பவுசர்கள் மோட்டார் வாகன சட்டத்தின் (அதிகாரம் 203) 2(i) பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

### 3.2 விளைவற்ற சொத்துக்கள்

ரூபா 2,483,900 தொகையான வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் 11 உபகரணங்கள் வருடக் கணக்காக விளைவற்றுக் காணப்பட்டன.

### 3.3 தாமதப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

ரூபா 3,628,488 மதிப்பீட்டுப் பெறுமதியான 07 செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் அச்செயற்திட்டங்களின் நிர்மாணங்களை பூர்த்தி செய்ய முடியாதிருந்தன.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்